**6. $\frac{1}{2}mv^2 = mgh$ என்ற சமன்பாட்டை பரிமாணப் பகுப்பாய்வு முறைப்படி சரியானதா எனக் கண்டறிக.** [CRT & May - 2022]

**விடை.** $\frac{1}{2}mv^2 = mgh$ இன் பரிமாண வாய்ப்பாடு

$= [M][LT^{-1}]^2 = [ML^2T^{-2}]$

mgh இன் பரிமாண வாய்ப்பாடு $= [M][LT^{-1}]^2[L] = [ML^2T^{-2}]$

$\therefore [ML^2T^{-2}] = [ML^2T^{-2}]$

இருபுறங்களிலும் பரிமாணங்கள் சமம். எனவே $\frac{1}{2}mv^2 = mgh$ என்ற சமன்பாடு பரிமாண முறைப்படி சரி.

## கூடுதல் வினாக்கள்

**I. ஒரு மதிப்பெண் வினாக்கள்:**

**1 மதிப்பெண்**

**அ. சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக:**

**1. 'சைன்சியா' என்பதன் பொருள்**

(a) அதே மாதிரி (b) அறிந்து கொள்ளுதல்
(c) கட்டுப்பாடு (d) கையாளுதல்

[விடை. (b) அறிந்து கொள்ளுதல்]

**2. வானியல் அளவு ______ வகை இயற்பியல்**

(a) மீசோஸ்கோபிக் (b) மைக்ரோஸ்கோபிக்
(c) மேக்ரோ ஸ்கோபிக் (d) எதுவுமில்லை

[விடை. (c) மேக்ரோ ஸ்கோபிக்]

**3. மீ நுண்ணமைப்பு [microscopic] வகை இயற்பியலின் பின்வரும் வகை.**

(a) மரபு இயற்பியல் (b) நிலையியல்
(c) பாய்ம எந்திரவியல்
(d) குவாண்டம் இயற்பியல்

[விடை. (d) குவாண்டம் இயற்பியல்]

**4. பின்வருவனவற்றுள்ள எவ்வகை இயற்பியல் இடைப்பட்ட நீள் அளவைக் குறிக்கிறது.**

(a) மேக்ரோஸ்கோபிக் இயற்பியல்
(b) மீசோஸ்கோபிக் இயற்பியல்
(c) மைக்ரோஸ்கோபிக்
(d) எல்லாவற்றையும்

[விடை. (b) மீசோஸ்கோபிக் இயற்பியல்]

**5. வானியல் கால அளவுகள் மற்றும் மைக்ரோஸ்கோபிக் அளவுக்குமான வீச்சு.**

(a) $10^{15}$s முதல் $10^{-15}$s (b) $10^{9}$s முதல் $10^{-18}$s
(c) $10^{18}$s முதல் $10^{-22}$s (d) $10^{11}$s முதல் $10^{-16}$s

[விடை. (c) $10^{18}$s முதல் $10^{-22}$s]

**6. மின்னோட்டவியலும், காந்தவியலுக்குமான விதி முறைகள் பயன்படுத்தப்படுவது.**

(a) தந்தியிலா தொடர்பு
(b) நியூக்ளியர் உலைகளில்
(c) நீராவி என்ஜின் (d) ஆகாயவிமானத்தில்

[விடை. (a) தந்தியிலா தொடர்பு]

**7. 1 டெக்காகிராம் என்பது**

(a) 10 g (b) 100 g
(c) 1 kg (d) 100 kg

[விடை. (a) 10 g]

www.Padasalai.Net www.surabooks.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores



**8. 1 நானோ செகண்டு இதற்கு சமமானது**

(a) $10^{-6}$ s (b) $10^{-3}$ s
(c) $10^{-15}$ s (d) $10^{-9}$ s

**[விடை. (d) $10^{-9}$ s]**

**9. நியூக்ளியஸ் அமைப்பின் அளவிற்கான அலகு**

(a) ஆம்ஸ்ட்ராங் (b) மைக்ரான்
(c) நேநோ (d) பெர்மி

**[விடை. (d) பெர்மி]**

**10. 1 பர்செக் (parsec or parallatic second)**

(a) $3.08 \times 10^{16}$ m (b) $1.49 \times 10^{11}$ m
(c) $9.46 \times 10^{15}$ m (d) $1.66 \times 10^{-27}$ m

**[விடை. (a) $3.08 \times 10^{16}$ m]**

**11. 1 பர்செக் என்பது எத்தனை ஒளி ஆண்டுகள்**

(a) 3.26 (b) 6.67
(c) 1.5 (d) 9.4 **[விடை. (a) 3.26]**

**12. எத்தனை அணு அலகு 1 மீட்டருக்குச் சமம்?**

(a) $3.26 \times 10^{11}$ AU (b) $1.496 \times 10^{11}$ AU
(c) $3.08 \times 10^{16}$ AU (d) $6.684 \times 10^{-12}$ AU

**[விடை. (d) $6.684 \times 10^{-12}$ AU]**

**13. ஒரு லூனார் மாதம்**

(a) 29 நாட்கள் (b) 27.3 நாட்கள்
(c) 365 நாட்கள் (d) 30 நாட்கள்

**[விடை. (a) 29 நாட்கள்]**

**14. 1 ஒளி ஆண்டின் மதிப்பு டெராமீட்டரில்**

(a) $9.46 \times 10^{6}$ Tm (b) $9.46 \times 10^{9}$ Tm
(c) $9.46 \times 10^{2}$ Tm (d) $9.46 \times 10^{3}$ Tm

**[விடை. (d) $9.46 \times 10^{3}$ Tm]**

**15. முடுக்கம் 20 m/s$^2$ என்பது km/h$^2$ ல்**

(a) $2.59 \times 10^{5}$ km/h$^2$ (b) $1.29 \times 10^{5}$ km/h$^2$
(c) $2.0 \times 10^{3}$ km/h$^2$ (d) $3.5 \times 10^{5}$ km/h$^2$

**[விடை. (a) $2.59 \times 10^{5}$ km/h$^2$]**

**16. அணுக்களின் நிறையை அளவிடப் பயன்படும் சாதனம்**

(a) ஸ்பெக்ட்ராகிராப் (b) பெர்மி
(c) டெலஸ்கோப் (தொலைநோக்கி)
(d) மைக்ரோஸ்கோப் (நுண்ணோக்கி)

**[விடை. (a) ஸ்பெக்ட்ராகிராப்]**

**17. பின்வருவனவற்றில் தவறான கூற்று**

(a) 1 பெர்மி = $10^{15}$ m
(b) எல்லா சுழி அல்லாத இலக்கங்களும் முக்கியமானவை.
(c) 1AU = $1.496 \times 10^{11}$ m
(d) வேகம் ஒரு வழி அலகு

**[விடை. (a) 1 பெர்மி = $10^{15}$ m]**

**18. பின்வருவனவற்றுள் தவறான கூற்று எது?**

(a) தகைவு பரிமாணமற்றது
(b) அடிப்படை அளவுகள் அடிநிலை அலகுகள் எனப்படும்.
(c) விசை = நிறை × முடுக்கம்
(d) 1 சோலார் வருடம் = 1500 நாட்கள்

**[விடை. (d) 1 சோலார் வருடம் = 1500 நாட்கள்]**

**19. பின்வருவனவற்றில் சரியான கூற்று எது?**

(a) திசைவேகம் என்பது அடிப்படை அளவு
(b) 1 சூரியநாள் = 24 மணிநேரம்
(c) 1 ஷேக் = $10^4$s
(d) நிறை வழி அளவு

**[விடை. (b) 1 சூரியநாள் = 24 மணிநேரம்]**

**20. $2.64 \times 10^4$ kg ல் உள்ள முக்கிய எண்ணுருக்களின் எண்ணிக்கை.**

(a) 2 (b) 4 (c) 5 (d) 3

**[விடை. (d) 3]**

**21. ஒரு துகளின் இடப்பெயர்ச்சி X-அச்சில் காலத்தைப் பொறுத்து இயங்குகிறது எனில் $x = at + bt^2 - ct^3$. b ன் பரிமாணங்கள்**

(a) $L^0T^{-3}$ (b) $L^0T^{-3}$ (c) $LT^{-2}$ (d) $LT^{-3}$

**[விடை. (c) $LT^{-2}$]**

**குறிப்பு :** $x = at + bt^2 - ct^3$ $\quad L = aT + bT^2 - cT^3$

$\therefore\ b = LT^{-2}$

**22. E மற்றும் B மின்புலம், மற்றும் காந்தப்புலம் எனில் E, B க்கான விகிதத்தின் பரிமாணம்**

(a) கோணம் (b) முடுக்கம்
(c) திசை வேகம் (d) இடப்பெயர்ச்சி

**[விடை. (c) திசை வேகம்]**

**குறிப்பு :** $\vec{F} = q(\vec{E} + \vec{v} \times \vec{B})$ $\quad \vec{E}$ ன் பரிமாணம் $v\vec{B}$ க்கு சமம்.

$\frac{E}{B}$ ன் பரிமாணம் = $v$ யின் பரிமாணம்.

www.Padasalai.Net www.Surabooks.com
orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores



**23.** **விசை |F|, திசைவேகம் |v| மற்றும் காலம் |T| என்பன அடிப்படை அலகுகள் எனில் நிறையின் பரிமாணங்கள்.**

(a) $Fv^{-1}T$ (b) $Fv^{-1}T$
(c) $FvT^{-1}$ (d) $FvT^{-2}$

**[விடை. (c) $FvT^{-1}$]**

**குறிப்பு :**

$$F = \frac{mv}{t}[m] = [F v^{-1} T] \qquad \left[\because a = \frac{v}{t}\right]$$

**24.** **K.E ன் பரிமாணம்**

(a) $M^2L^2T^{-1}$ (b) $M^1L^1T^1$
(c) $M^1L^2T^{-2}$ (d) $M^2L^2T^{-2}$

**[விடை. (c) $M^1L^2T^{-2}$]**

**25.** **யுனிவெர்சல் புவி ஈர்ப்பு மாறிலியின் பரிமாணம்**

(a) $M^{-2}L^3T^{-2}$ (b) $M^{-2}L^2T^{-1}$
(c) $M^{-1}L^3T^{-2}$ (d) $ML^2T^{-1}$

**[விடை. (c) $M^{-1}L^3T^{-2}$]**

**26.** **கன சதுரத்தின் அடர்த்தி அதன் பக்கத்தின் நிறை மற்றும் நீளத்தை அளவிடுதலால் கணக்கிடப்படுகிறது. நிறை மற்றும் நீளத்தில் ஏற்படும் மீப்பெரு பிழை 5% மற்றும் 3%. அடர்த்தியில் ஏற்படும் மீப்பெருபிழை**

(a) 9% (b) 8% (c) 14% (d) 2%

**[விடை. (c) 14%]**

**குறிப்பு :** ஒப்படர்த்தி $\rho = \frac{M}{V} = \frac{M}{L^3}$ $\Delta M = 5\%$ $\Delta C = 3\%$

$$\frac{\Delta P}{P} = \frac{\Delta M}{M} + \frac{\Delta V}{V} \Rightarrow \frac{\Delta P}{P}\% = \left(\frac{\Delta M}{M} + 3\cdot\frac{\Delta L}{L}\right)\%$$

$$\left(\frac{\Delta P}{P}\right)\% = (5\% + 3\times3\%) = (5+9) = 14\%$$

**27.** **பின்னப்பிழை $\frac{\Delta x}{x}$**

(a) $\pm\left(\frac{\Delta a}{a}\right)$ (b) $\pm n\left(\frac{\Delta a}{a}\right)$
(c) $\pm n\log_e\left(\frac{\Delta a}{a}\right)$ (d) $\pm n\log_{10}\left(\frac{\Delta a}{a}\right)$

**[விடை. (b) $\pm n\left(\frac{\Delta a}{a}\right)$]**

**28.** **ஒரு ஒளியாண்டின் மதிப்பு டெராமீட்டரில்**

(a) $9.46\times 10^6$ Tm (b) $9.46 \times 10^9$ Tm
(c) $9.46 \times 10^2$ Tm (d) $9.46 \times 10^3$ Tm

**[விடை. (d) $9.46 \times 10^3$ Tm]**

**29.** **அணுவின் நிறையைக் கணக்கிட உதவும் சாதனம்**

(a) ஸ்பெக்ட்ரோமானி (b) இயற்பியல் தராசு
(c) தொலை நோக்கி
(d) நுண்நோக்கி (மைக்ரோஸ்கோப்)

**[விடை. (a) ஸ்பெக்ட்ரோமானி]**

**30.** **$\pi$ = 3.14 எனில் $\pi^2$ ன் மதிப்பு**

(a) 9.8596 (b) 9.860
(c) 9.86 (d) 9.9

**[விடை. (c) 9.86]**

**31.** **பின்வரும் சோடிகளில் ஒத்த பரிமாணமுடைய இயற்பியல் அளவுகள்**

(a) விசை மற்றும் ஆற்றல்
(b) அழுத்தம் மற்றும் தகைவு
(c) உந்தம் மற்றும் நிலைம விசை
(d) திருப்பு விசை மற்றும் விசையின் திருப்புத்திறன்

**[விடை. (b) அழுத்தம் மற்றும் தகைவு]**

**32.** **போல்ட்ஸ்மேன் மாறிலியின் பரிமாண வாய்ப்பாடு**

(a) $[M L^2 T^{-1}]$ (b) $[AT\ mol^{-1}]$
(c) $[ML^2T^{-2} K^{-1}]$ (d) ஏதுமில்லை

**[விடை. (c) $[ML^2T^{-2}K^{-1}]$)**

**33.** **ஒப்படர்த்தி இதற்கு ஒரு எடுத்துக்காட்டு**

(a) பரிமாணமுள்ள மாறிகள்
(b) பரிமாணமற்ற மாறிகள்
(c) பரிமாணமுள்ள மாறிலிகள்
(d) பரிமாணமற்ற மாறிலிகள்

**[விடை. (b) பரிமாணமற்ற மாறிகள்]**

**34.** **8.250 ஐ முழுமைப்படுத்தும் போது**

(a) 8.3 (b) 8.2 (c) 8.25 (d) 8.26

**[விடை. (b) 8.2]**

orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores



**9. மிக நீண்ட தொலைவுகளை அளவிடப் பயன்படும் இரண்டு அலகுகளைக் குறிப்பிடுக.**

விடை. (i) **வானியல் அலகு (AU):** புவியின் மையத்திலிருந்து சூரியனின் மையம் வரை உள்ள சராசரித் தொலைவு.

1 வானியல் அலகு

AU = $1.496 \times 10^{11}$ m.

(ii) **ஒளி ஆண்டு:** வெற்றிடத்தில் ஒளியானது ஓர் ஆண்டில் செல்லக்கூடிய தொலைவு.

1 ஒளியாண்டு = $9.467 \times 10^{15}$ m.

**10. அளவீடு செய்தலில் 'பிழை' என்றால் என்ன? இதனால் அளவீடுகளில் ஏற்படும் தாக்கம் யாது?**

விடை. எந்த ஒரு அளவீட்டின் முடிவுகளும் சில துல்லியமற்ற தன்மையை உள்ளடக்கியிருக்கும். இயற்பியல் அளவு ஒன்றை அளவீடு செய்யும்போது ஏற்படும் நிலையற்ற தன்மை 'பிழை' எனப்படும். எனவே இயற்பியல் அளவின் உண்மையான மதிப்பிற்கும் அளந்தறியப்பட்ட மதிப்பிற்கும் இடையே உள்ள வேறுபாடு பிழையாகும்.

(Error) பிழை = உண்மையான மதிப்பு – கணக்கிடப்பட்ட மதிப்பு.

இதனால், இம்மதிப்புகளைப் பயன்படுத்தி செய்யப்படும் கணக்கீடுகளும் பிழையாக அமையும்.

எந்த ஒரு ஆய்விலும் மிகச் சரியான அளவீடுகளை எடுக்க முடியாது.

**11. தனிப்பிழை அல்லது சார்பிலாப்பிழை என்றால் என்ன?**

விடை. இயற்பியல் பண்பளவின் அளவீட்டில் தனிப்பிழை என்பது உண்மை மதிப்பிற்கும் கணக்கிடப்பட்ட மதிப்பிற்கும் உள்ள வேறுபாட்டு அளவு. $\Delta a_n = a_m - a_n$

**12. அளவிடுதலில் பயன்படுத்தப்படும் கூறுகள் யாவை? தெளிவுபடுத்து.**

விடை. துல்லியத்தன்மை (Accuracy) மற்றும் நுட்பம் (Precision) ஆகிய இரு வேறுபட்ட கூறுகள் பயன்படுத்தப்படுகின்றன.

(i) **துல்லியத்தன்மை:** உண்மையான மதிப்பிற்கு எவ்வளவு அருகில் அளவீடு செய்தோம் என்பதைக் குறிக்கும்.

(ii) **நுட்பம்:** இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அளவுகள் ஒன்றுக் கொன்று எவ்வளவு நெருக்கமாக உள்ளது என்பதைக் குறிக்கும்.

**13. பிழைகளின் இறுதி முடிவுகள் எவற்றைச் சார்ந்துள்ளது?**

விடை. (i) தனித்தனியான அளவீடுகளில் உள்ள பிழைகள்

(ii) கணித செயலிகளின் செயற்பாட்டின் இயல்பைச் சார்ந்து இறுதி முடிவு பெறப்படும். எனவே, பிழைகளை ஒன்று சேர்க்கத் தேவையான விதிகளை அறிந்திருக்க வேண்டும்.

**14. அளவீடு செய்தலில் பிழைகளின் வகைகள் யாவை?**

விடை. (i) **முறையான பிழைகள்:** 1. கருவிப்பிழைகள் 2. செய்முறையின் குறைபாடுகள் 3. தனிப்பட்ட பிழைகள் 4. புறக்காரணிகளால் ஏற்படும் பிழைகள் 5. மீச்சிற்றளவு பிழைகள்

(ii) ஒழுங்கற்ற பிழைகள் அல்லது வாய்ப்பு பிழைகள்

(iii) மொத்தப் பிழைகள்

**15. சராசரி தனிப்பிழை என்பது யாது?**

விடை. சராசரி தனிப்பிழை என்பது அனைத்து அளவுகளின் தனிப் பிழைகளின் எண் மதிப்புகளின் கூட்டுச்சராசரி ஆகும்.

$$\Delta a_m = \frac{1}{n}\sum_{i=1}^{n} |\Delta a_i|$$

$a_m$ – உண்மையான மதிப்பு.

$\Delta a_m$ – சராசரி தனிப்பிழை எனில் அளவுகளின் எண் மதிப்புகள் $(a_m + \Delta a_m)$ மற்றும் $(a_m - \Delta a_m)$ இடையில் இருக்கும்.

**16. விழுக்காட்டுப் பிழை என்றால் என்ன?**

விடை. ஒப்பீட்டுப் பிழையின் விழுக்காட்டில் குறிப்பிட்டால் அது விழுக்காட்டுப் பிழை எனப்படும்.

$$\text{விழுக்காட்டுப் பிழை} = \frac{\Delta a_m}{a_m} \times 100\%$$

**17. முக்கிய எண்ணுருக்கள் குறிப்பு வரைக.**

விடை. அளவீடு செய்யும்போது தகுந்த காரணத்தினால் தேவை என நினைத்து எண்ணிக்கை செய்த இலக்கங்களின் எண்ணிக்கை முக்கிய எண்ணுரு ஆகும். ஓர் எண்ணில் பொருளுள்ள இடமதிப்புகள் அந்த எண்ணின் முக்கிய எண்ணுரு. அளவீடுகளில் வெவ்வேறு அலகுகளைத் தெரிந்தெடுப்பதால் இது மாறாது.

**18. 'பரிமாணங்கள்' என்பது யாது?**

விடை. இயற்பியல் அளவின் பரிமாணத்தைப் பெறுவதற்காக அடிப்படை அளவுகளின் பரிமாணங்களின் உயர்த்தப்பட்ட படிகளே அந்த இயற்பியல் அளவின் பரிமாணங்கள் ஆகும்.

$$\text{திசை வேகம்} = \frac{\text{இடப்பெயர்ச்சி}}{\text{காலம்}} = \frac{[L]}{[T]} = [M^0LT^{-1}]$$

**19. $ML^{-1}\ T^{-2}$ பரிமாண வாய்பாடு கொண்ட இயற்பியல் பண்பளவைகளைக் குறிப்பிடுக.**

விடை. அழுத்தம், தகைவு, யங்குணகம், பரும குணகம், விறைப்பு குணகம், ஆற்றல், அடர்த்தி.

www.Padasalai.Net www.surabooks.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores



**20. குறைந்த மாறிகளைக் கொண்ட பரிமாணங்களுக்கு எடுத்துக்காட்டு தருக.**

விடை. (1) பரப்பு - $[L^2]$ (2) பருமன் - $[L^3]$ (3) சுழற்சி ஆரம் - [L] (4) அதிர்வெண் - $[T^{-1}]$ (5) கோணத்திசை வேகம் - $[T^{-1}]$ (6) கோணமுடுக்கம் - $[T^{-2}]$ (7) திசைவேகம் - $[LT^{-1}]$ (8) முடுக்கம் - $[LT^{-2}]$ (9) மின்னூட்டம் - [AT] (10) விசை மாறிலி - $[MT^{-2}]$

**21. ஒப்படர்த்தி, கோணம், திரிபு இவற்றிற்கு ஏன் பரிமாணம் இல்லை?**

விடை. (i) ஒப்படர்த்தி $= \dfrac{\text{பொருளின் அடர்த்தி}}{4^o\text{c ல் நீரின் அடர்த்தி}}$

$$= \frac{ML^{-3}}{ML^{-3}} = M^0L^0T^0$$

(ii) கோணம் $= \dfrac{\text{வில்}}{\text{ஆரம்}} = \dfrac{L}{L} = M^0L^0T^0$

(iii) திரிபு $= \dfrac{\text{பரிமாணமாற்றம்}}{\text{மூலபரிமாணம்}} = M^0L^0T^0$

இவைகள் ஒரே பரிமாண வாய்பாடு உள்ள இரு இயற்பியல் அளவுகளின் தகைவாக இருப்பதால் பரிமாணங்கள் இல்லை.

**22. இயற்பியலில் கால அளவு மற்றும் நிறைகளின் வீச்சு பற்றி கூறு.**

விடை. எலக்ட்ரான் மற்றும் புரோட்டான்களை உள்ளடக்கிய மீச்சிறு அளவுகள் முதல் வானியல் நிகழ்வுகள் போன்ற மிகப்பெரிய அளவுகள் வரை இயற்பியல் எடுத்துரைக்கிறது.

(i) **கால அளவின் வீச்சு:** வானியல் அளவுமுதல் நுண்ணிய அளவு வரை ($10^{18}$ s முதல் $10^{-22}$ s)

(ii) **நிறைகளின் வீச்சு:** மீப்பெரு வான் பொருட்களிலிருந்து எலக்ட்ரான் வரை. $10^{55}$ kg (அளவிடக் கூடிய பிரபஞ்சத்தின் நிறை) முதல் எலக்ட்ரானின் நிறை $9.11 \times 10^{-31}$ kg வரை.

**23. தொழில் நுட்பத்தில் இயற்பியலின் பங்கு யாது?**

விடை. (i) இயற்பியலின் கோட்பாடுகளை நடைமுறையில் பயன்படுத்துவதே தொழில் நுட்பமாகும்.

(ii) பல்வேறு துளைகளின் பயனுள்ள பொருட்களை கண்டுபிடிக்கவும் அவற்றைத் தயாரிக்கவும் மற்றும் நடைமுறை பிரச்சனைகளைத் தீர்க்கவும் அறிவு திறனை பயன்படுத்துவதுமே தொழில் நுட்பவியலாகும்.

**24. SI அலகு முறையில் நீளத்தை வரையறு.**

விடை. நீளத்தின் அலகு மீட்டர். குறியீடு m. வெற்றிடத்தில் $\dfrac{1}{299,79,2458}$ நொடியில் ஒளியானது கடக்கும் பாதையின் நீளம் 1 மீட்டர் ஆகும்.

**25. வானியலுடன் இயற்பியலின் தொடர்பு யாது?**

விடை. (i) கோள்களின் இயக்கம் மற்றும் வான் பொருட்கள் பற்றி அறிய வானியல் தொலை நோக்கிகள் பயன்படுகின்றன

(ii) வானியலாளர்கள் அண்டத்தின் தொலைதூரத்தை உற்று நோக்க ரேடியோ தொலை நோக்கியை பயன்படுத்துகின்றனர்.

(iii) இயற்பியல் தத்துவங்களைப் பயன்படுத்தல் அண்டத்தினைப் பற்றிக் கற்றுக் கொள்ள முடிகிறது.

**26. SI அலகுமுறையில் நிறைக்கான அலகின் வரைமுறை யாது?**

விடை. நிறையின் அலகு கிலோகிராம். குறியீடு *kg*. பாரிசுக்கு அருகில் சர்வஸ் என்ற இடத்தில் உள்ள பன்னாட்டு எடைகள் மற்றும் அளவைகள் நிறுவனத்தில் வைக்கப்பட்டுள்ள பிளாட்டினம் – இரிடியம் உலோகக் கலவையிலான உருளையின் நிறையே ஒரு கிலோகிராம் இதன் விட்டம் அதன் உயரத்திற்குச்சமம்.

**27. ஒளிச் செறிவிற்கான SI அலகு யாது? வரையறு?**

விடை. கேண்டிலா. $5.40 \times 10^{14}$ Hz அதிர்வெண் உடைய ஒளிமூலம் உமிழும் ஒற்றை நிறக் கதிர்வீச்சின் செறிவு, ஒரு குறிப்பிட்ட திசையில் $\dfrac{1}{683}$ வாட்/ஸ்ரேடியன் எனில் அத்திசையில் ஒளிச் செறிவு ஒரு கேண்டிலா ஆகும்.

**28. நீரின் முப்புள்ளி என்பது யாது?**

விடை. நீரின் முப்புள்ளி என்பது தெவிட்டு நீராவி, தூயநீர் மற்றும் உருகும் பனிக்கட்டி ஆகிய மூன்றும் சமநிலையில் உள்ளபோது உள்ள வெப்பநிலை ஆகும். நீரின் முப்புள்ளி வெப்பநிலை 273.16 k.

**29. $10^{-5}$m முதல் $10^2$m வரையிலான தொலைவுகளை எவ்வாறு அளப்பாய்?**

விடை. $10^{-5}$m முதல் $10^2$m வரையிலான தொலைவுகளை நேரடி முறையில் அளக்க முடியும். எடுத்துக்காட்டாக $10^{-3}$m முதல் 1 m வரையிலான தொலைவை 1 மீட்டர் அளவுகோலைக் கொண்டு அளக்க முடியும். $10^{-4}$m வரையிலான தொலைவை வெர்னியர் அளவி கொண்டும், $10^{-5}$m வரையிலான தொலையை திருகு அளவி கொண்டும் அளக்க முடியும்.

**30. 50 mm வரையிலான பொருட்களின் பரிமாணங்களை அளவிடப் பயன்படும் கருவி எது? அதன் தத்துவம் யாது?**

விடை. (i) திருகு அளவியானது 50 mm வரையிலான பொருட்களின் பரிமாணங்களை மிகத் துல்லியமாக அளவிடப் பயன்படும் கருவி

(ii) **தத்துவம்:** திருகின் வட்ட இயக்கத்தைப் பயன்படுத்தி பெரிதாக்கப்பட்ட நேர்க்கோட்டு இயக்கமாகும். இதன் மீச்சிற்றளவு 0.01 mm.

www.Padasalai.Net www.surabooks.com
orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores



**31. மைக்ரோசம் [நுண்உலகம்] உருவாக்குபவை யாவை?**

விடை. மூலக்கூறுகள், அணுக்கள், புரோட்டான்கள், நியூட்ரான்கள், எலக்ட்ரான்கள், பாக்டீரியா போன்ற பொருட்களும் அவற்றின் இடையேயான தொலைவுகளும் நுண் உலகத்தை உருவாக்குகின்றன.

**32. பின்வரும் வழி அளவுகளுக்கான அவற்றின் சமன்பாடு, அலகுகளைக் கூறு.**

விடை. (1) நிலைமத்திருப்பத்திறன் (2) கணத்தாக்கு விசை
(3) அழுத்தம் (4) ஃபிளாங்க் மாறிலி
(5) காந்தத்தூண்டல் (6) தன் வெப்பம்
(7) விசைமாறிலி (8) திருப்புவிசை (அல்லது) விசையின் திருப்புத்திறன்.

| | இயற்பியல் அளவு | சமன்பாடு | அலகு |
|---|---|---|---|
| 1 | நிலைமத் திருப்புத் திறன் | நிறை × (தொலைவு)$^2$ | kg m$^2$ |
| 2 | கணத்தாக்கு விசை | விசை × காலம் | Ns |
| 3 | அழுத்தம் | $\frac{\text{விசை}}{\text{பரப்பு}}$ | Nm$^{-2}$ அல்லது Pa பாஸ்கல் |
| 4 | ஃபிளாங்க் மாறிலி | $\frac{\text{போட்டானின் ஆற்றல்}}{\text{அதிர்வெண்}}$ | Js |
| 5 | காந்தத் தூண்டல் | $\frac{\text{விசை}}{\text{மின்னோட்டம்} \times \text{நீளம்}}$ | NA$^{-1}$ m$^{-1}$ (அ) டெஸ்லா |
| 6 | தன் வெப்பம் | $\frac{\text{வெப்ப ஆற்றல்}}{\text{நிறை} \times \text{வெப்பநிலை}}$ | Jkg$^{-1}$ k$^{-1}$ |
| 7 | விசை மாறிலி | $\frac{\text{விசை}}{\text{இடப்பெயர்ச்சி}}$ | Nm$^{-1}$ |
| 8 | திருப்பு விசை | விசை × தொலைவு | Nm |

## III. சிறுவினாக்கள்: 3 மதிப்பெண்கள்

**1. இயற்பியலின் பிரிவுகள் எத்தனை வகைப்படும் அவை யாவை?**

விடை. (i) மரபு இயற்பியல் (classical physics)
(ii) நவீன இயற்பியல் (modern physics)

(i) **மரபு இயற்பியல்:**
(1) மரபு எந்திரவியல் (2) வெப்ப இயக்கவியல்
(3) ஒளியியல்
(4) மின்னோட்டவியலும் காந்தவியலும்
(5) ஒலியியல் (6) வான் இயற்பியல்
(7) சார்பியல்

(ii) **நவீன இயற்பியல்:**
(1) குவாண்டம் எந்திரவியல்
(2) அணு இயற்பியல்
(3) அணுக்கரு இயற்பியல்
(4) பொதிவு பருப் பொருள் இயற்பியல்
(5) உயர் ஆற்றல் இயற்பியல்.

இயற்கையின் விதிகளை வெளிக் கொணர்வதில் துணைபுரிந்த அடிப்படை அறிவியல் இயற்பியலாகும். இதன் மொழி கணிதவியலாகும். முதன் முதலில் வளர்ச்சியடைந்த அறிவியல் பிரிவு வானியலும், கணிதவியலுமேயாகும். எந்திரவியல் என்பது இரு பிரிவுகளை உடையது. அலை நிலையியல், இயக்கவிசையில். மேலும் இயக்கவிசையியல் இயக்கவியல், விசையியல் என்ற உட்பிரிவுகளைக் கொண்டது.

**2. இயற்பியல் கண்டுபிடிப்புகளின் வகைகள் யாவை? விளக்குக.**

விடை. (i) இயற்பியல் கண்டுபிடிப்புகள் இரு வகைப்படும்.
(1) தற்செயலான கண்டுபிடிப்புகள்
(2) உள்ளுணர்வு மூலம் கணித்தவற்றை ஆய்வகங்கள் மூலம் நன்கு பகுப்பாய்வு செய்து கண்டறிதல்.

(ii) எடுத்துக்காட்டாக காந்தத் தன்மை தற்செயலாக உணரப்பட்டது.

(iii) ஆனால் காந்தவியலின் வினோதப் பண்புகள் கோட்பாட்டளவில் பகுப்பாய்வு செய்யப்பட்டன. இந்தப் பகுப்பாய்வு காந்தப் பொருட்களின் அடிப்படைப் பண்புகளை வெளிப்படுத்தியது.

(iv) இதன் மூலம் செயற்கைக் காந்தங்கள் ஆய்வகத்தில் உருவாக்கப்பட்டன.

(v) இயற்பியல் கோட்பாடுகளை பயன்படுத்தி **முன்னறியும் முறை**யானது தொழில் நுட்பம் மற்றும் மருத்துவத் துறையின் வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கிறது (உ.ம்) ஐன்ஸ்டீனின் கருத்தியல் ரீதியாக கண்டறியப்பட்ட $E = mc^2$ சமன்பாடு.

(vi) கோட்பாடு ரீதியான கணிப்புகளும், கணக்கீட்டு நடைமுறைகளும் முக்கியமான பயன்பாடுகளுக்குத் தேவைப்படும் பொருத்தமான மூலப்பொருட்களைத் தேர்வு செய்யப் பயன்படுகின்றன. (உ.ம்) மருந்து தயாரிப்பு நிறுவனங்கள் புதிய மருந்துப் பொருட்களைத் தயாரிக்க இந்த அணுகு முறையையே பயன்படுத்துகின்றன.

www.Padasalai.Net www.surabooks.com
orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores



**3. எந்திரவியலில் பயன்படும் பொதுவான அலகு முறைகளை விளக்கு.**

**விடை.** **எந்திரவியலில் பயன்படும் பொதுவான அலகு முறைகள்**

(i) **F.P.S. அலகு முறை** ஓர் பிரிட்டிஷ் அலகு முறையாகும். இம்முறையில் நீளம், நிறை மற்றும் காலத்தை அளக்க முறையே அடி (Foot), பவுண்ட் (Pound), வினாடி (Second) ஆகிய மூன்று அடிப்படை அலகுகள் பயன்படுத்தப்படுகின்றன. இது மெட்ரிக் அலகுமுறை அல்ல.

(ii) **C.G.S. அலகு முறை** இது ஓர் காஸ்ஸியன் (Gaussian) முறையாகும். இம்முறையில் நீளம், நிறை மற்றும் காலத்தை அளக்க முறையே சென்டிமீட்டர், கிராம் மற்றும் வினாடி ஆகிய மூன்று அடிப்படை அலகுகள் பயன்படுத்தப்படுகின்றன.

(ii) **M.K.S. அலகு முறை** இம்முறையில் நீளம், நிறை மற்றும் காலத்தை அளக்க முறையே மீட்டர், கிலோகிராம் மற்றும் வினாடி ஆகிய மூன்று அடிப்படை அலகுகள் பயன்படுத்தப்படுகின்றன.

**4. AU, ஒளி ஆண்டு மற்றும் பர்செக் இவற்றில் பெரிய அளவு எது? வரிசைப்படுத்து. சூரியனிலிருந்து புவியின் சராசரித் தொலைவினை (i) ஒளி ஆண்டு (ii) பர்செக் இவற்றில் குறிப்பிடு.**

**விடை.** பர்செக் பெரிய அலகு ஆகும்.

பர்செக் > ஒளி ஆண்டு > அணுஅலகு

$3.08 \times 10^{16}$m > $9.467 \times 10^{15}$m > $1.496 \times 10^{11}$m

சூரியனிலிருந்து புவியின் சராசரித் தொலைவு ($d$) (வானியல் அலகு)

(i) $d = 1\text{ AU} = 1.496 \times 10^{11}\text{ m}$

$$= \frac{1.496\times10^{11}}{9.46\times10^{15}} = 1.58 \times 10^{-15} \text{ ஒளி ஆண்டு}$$

(ii) $d = \dfrac{1.496\times10^{11}}{3.08\times10^{16}}$ பர்செக் $= 4.86 \times 10^{-6}$ பர்செக்

**5. ரேடியன் டிகிரி மற்றும் மினிட்ஸ் இவற்றிற்கிடையேயான தொடர்பினைத் தருக.**

**விடை.** $1° = \dfrac{\pi}{180}$ ரேடியன் $= 1.745 \times 10^{-7}$ ரேடியன்

$$\therefore 1' = \frac{1°}{60} = \frac{1.745\times10^{-2}}{60} = 2.908 \times 10^{-4} \text{ ரேடியன்}$$

$$\approx 2.91 \times 10^{-4} \text{ ரேடியன்}$$

$$\therefore 1'' = \frac{1°}{3600} = \frac{1.745\times10^{-2}}{3600}$$

$$= 4.847 \times 10^{-6} \text{ ரேடியன்} = 4.85 \times 10^{-6} \text{ ரேடியன்}$$

**6. புவியிலிருந்து நிலவின் தொலைவை இடமாறு தோற்றமுறை மூலம் கணக்கீடுக.**

**விடை.** புவியிலிருந்து நிலவின் தொலைவைக் கணக்கிடுதல் (இடமாறு தோற்றமுறை):

(i) படத்தில் C என்பது புவியின் மையம். A மற்றும் B என்பது புவி மேற்பரப்பில் நேர் எதிரெதிரான பகுதிகள். வானியல் தொலை நோக்கியின் உதவியால் A மற்றும் B யிலிருந்து அருகில் உள்ள விண்மீனுக்கும் சந்திரனுக்கும் (M) இடையேயான இடமாறு தோற்றக்கோணம் முறையே $\theta_1$ மற்றும் $\theta_2$ கண்டறியப்படுகிறது.

(ii) எனவே, புவியிலிருந்து நிலவின் மொத்த இடமாறு தோற்ற கோணம்

$\angle AMB = \theta_1 + \theta_2 = \theta$

$\theta = \dfrac{AB}{AM}$ ; $AM \approx MC$

$\theta = \dfrac{AB}{MC} \Rightarrow MC = \dfrac{AB}{\theta}$ ; AB மற்றும் $\theta$ மதிப்பு அறிந்திருந்தால் புவிக்கும் சந்திரனுக்கும், இடையேயான தொலைவை (MC) கணக்கிடலாம்.




**இடமாறு தோற்றமுறையின் மூலம் புவியிலிருந்து சந்திரனின் தொலைவைக் கணக்கிடுதல்**

**7. அளவின் அடுக்கினால் ஏற்படும் பிழையினை விளக்குக.**

**விடை.** **அளவின் அடுக்கினால் பிற்படும் பிழை**

A யின் $n$ வது அடுக்கு Z என்க $Z = A^n$

Z ன் பிழை $\Delta Z$ எனில்

$$Z \pm \Delta Z = (A \pm \Delta A)^n = A^n\left(1 \pm \frac{\Delta A}{A}\right)^n$$

$$= Z\left(1 \pm n\frac{\Delta A}{A}\right)$$

(இங்கு $|x| << 1, (1+x)^n \approx 1 + nx$ என்ற சமன்பாடு பயன்படுத்தப்படுகிறது)

இருபுறமும் Z ஆல் வகுக்க

$$1 \pm \frac{\Delta Z}{Z} = 1 \pm n\frac{\Delta A}{A} \Rightarrow \frac{\Delta Z}{Z} = n\frac{\Delta A}{A}$$

ஒரு அளவின் $n$ ஆவது அடுக்கின் பெரும பின்னப் பிழையானது. அதன் பின்னப்பிழையை $n$ ஆல் பெருக்குதலுக்கு சமம்.

www.Padasalai.Net
www.surabooks.com
orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores



பொதுவான விதிகள் எனில் $Z = \frac{A^p B^q}{C^r}$ ல் பெரும பின்னப் பிழை

$$\frac{\Delta Z}{Z} = p\frac{\Delta A}{A} + q\frac{\Delta B}{B} + r\frac{\Delta C}{C}$$

அதன் விழுக்காட்டுப்பிழை

$$\frac{\Delta Z}{Z}\times 100 = p\frac{\Delta A}{A}\times 100 + q\frac{\Delta B}{B}\times 100 + r\frac{\Delta C}{C}\times 100$$

**8. பரிமாணங்களைப் பொறுத்து இயற்பியல் அளவுகளை எத்தனை வகைகளாக வகைப்படுத்த முடியும்?**

**விடை.** (i) **பரிமாணமுள்ள மாறிகள்**

எந்த ஓர் இயற்பியல் அளவு பரிமாணத்தையும் மாறுபட்ட மதிப்புகளையும் பெற்றுள்ளதோ அவை பரிமாணமுள்ள மாறிகள் என அழைக்கப்படுகின்றன. எ.கா:– பரப்பு, கன அளவு, திசைவேகம் மற்றும் பல.

(ii) **பரிமாணமற்ற மாறிகள்**

எந்த இயற்பியல் அளவுகள் பரிமாணம் அற்று ஆனால் மாறுபட்ட மதிப்புகளைக் கொண்டுள்ளதோ அவை பரிமாணமற்ற மாறிகள் என அழைக்கப்படுகின்றன. எ.கா :– ஒப்படர்த்தி, திரிபு, ஒளிவிலகல் எண் மற்றும் பல.

(iii) **பரிமாணமுள்ள மாறிலிகள்**

எந்த இயற்பியல் அளவுகள் பரிமாணத்துடன் நிலையான மதிப்பைப் பெற்றுள்ளதோ அவை பரிமாணமுள்ள மாறிலிகள் என அழைக்கப்படுகிறது. எ.கா:– ஈர்ப்பியல் மாறிலி, பிளாங் மாறிலி மற்றும் பல.

(iv) **பரிமாணமற்ற மாறிலிகள்**

ஒரு மாறிலி பரிமாணமற்று இருப்பின் அவை பரிமாணமற்ற மாறிலிகள் எனப்படுகின்றன. எ.கா:– $\pi$, e (ஆய்லர் எண்) எண்கள் மற்றும் பல.

**9. வெவ்வேறு இயற்பியல் அளவுகளுக்கிடையே உள்ள தொடர்பினைத் தரும் சமன்பாட்டினை பரிமாண வாய்ப்பாட்டின் மூலம் பெறுக.**

**விடை.** வெவ்வேறு இயற்பியல் அளவுகளுக்கிடையே உள்ள தொடர்பினைத் தரும் சமன்பாட்டினைப் பெறுதல்.

Q என்ற இயற்பியல் அளவு $Q_1$, $Q_2$ மற்றும் $Q_3$ ஆகியவற்றைப் பொறுத்தது எனில்

$$Q \propto Q_1^a\, Q_2^b\, Q_3^c \;;\; Q = k\, Q_1^a\, Q_2^b\, Q_3^c$$

இங்கு $k$ – பரிமாணமற்ற மாறிலி. Q, $Q_1$, $Q_2$ மற்றும் $Q_3$ ஆகியவற்றின் பரிமாண வாய்ப்பாட்டை பிரதியிட்டு, பரிமாணத்தின் ஒரு படித்தான நெறிமுறைப்படி M, L, T அடுக்குகள் இருபுறமும் சமன்படுத்தப்படுகிறது.

இதன் மூலம் $a$, $b$, $c$ –இன் மதிப்புகளைப் பெற்று சமன்பாட்டைப் பெறலாம்.

**10. சோதனை முறை பிழைகளைக் குறைப்பதற்குப் பயன்படும் முறைகளை எடுத்துக்காட்டுடன் விளக்கு.**

**விடை.** **சோதனை முறை பிழைகளை குறைத்தல்**

| பிழையின் வகைகள் | எடுத்துக்காட்டு | குறைக்கும் வழிமுறை |
|---|---|---|
| ஒழுங்கற்ற பிழைகள் | ஒரு வளையத்தின் நிறையை மூன்று முறை ஒரே தராசைக் கொண்டு அளவிடுவதாகக் கொள்வோம். இதனால் பெறப்பட்ட சிறிது மாறுபட்ட அளவுகள் | அதிக எண்ணிக்கையில் நிறையை காண்க. புள்ளியியல் பகுப்பாய்வு மூலம் ஒழுங்கற்ற பிழைகளை கணக்கீடு செய்ய முடியும். மேலும் அதிக எண்ணிக்கையில் மீண்டும் மீண்டும் செய்து பார்ப்பதன் மூலம் பெறப்படும் மதிப்புகளின் சராசரியைக் கொண்டு குறைக்க முடியும். |
| முறையான பிழைகள் | ஒரு வருடத்திற்கு மேலாகப் பயன்படுத்தப்படும் நீட்டப்பட்ட துணி அளவு நாடா அளவுக்கோலைக் கொண்டு ஒரு பொருளின் நீளத்தை அளப்பதாகக் கொள்வோம் (அளவிடப்படும் எல்லா நீளங்களும் சரியாக இருப்பதில்லை). | முறையான பிழைகளைக் கண்டறிவது மிகவும் கடினம் அதனை புள்ளியில் முறையில் பகுப்பாய்வு செய்ய முடியாது. ஏனெனில் அனைத்து அளவீடுகளும் ஒரே முறையில் இருக்கும் (மிக அதிகம் அல்லது மிகக் குறைவு) |

**11. பரிமாணப் பகுப்பாய்வின் வரம்புகள் யாவை?**

**விடை.** பரிமாண பகுப்பாய்வின் வரம்புகள்

(i) எண்கள், $\pi$, $e$ (ஆய்லர் எண்) போன்ற பரிமாணமற்ற மாறிலிகளின் மதிப்பை இம்முறையின் மூலம் பெற முடியாது.

(ii) கொடுக்கப்பட்டுள்ள அளவு வெக்டர் அளவா? அல்லது ஸ்கேலர் அளவா? என்பதை இம்முறை மூலம் தீர்மானிக்க முடியாது.

(iii) திரிகோணமிதி, அடுக்குக்குறி மற்றும் மடக்கை சார்புகள் உள்ளடங்கிய சமன்பாடுகளின் தொடர்பு களைக் கண்டறிய இம்முறையில் இயலாது.

(iv) மூன்றுக்கு மேற்பட்ட இயற்பியல் அளவுகள் உள்ளடங்கிய சமன்பாடுகளுக்கு இம்முறையைப் பயன்படுத்த இயலாது.

www.Padasalai.Net www.surabooks.com
orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores



(v) இம்முறைறையில் ஒரு சமன்பாடு பரிமாண முறையில் சரியானதா, என்றே மெய்ப்பிக்க முடியும் அதன் உண்மையான சமன்பாட்டைக் கண்டறிய முடியாது. எடுத்துக்காட்டாக, $s = ut + 1/3\ at^2$ என்பது பரிமாண முறைப்படி சரி. ஆனால் உண்மையான சமன்பாடு $s = ut + 1/2\ at^2$ ஆகும்.

**12. பரிமாண முறையில் கொடுக்கப்பட்ட இயற்பியல் சமன்பாட்டை சரியா என சோதிக்கப்படுதலை எடுத்துக்காட்டுடன் விளக்குக:**

**விடை.** பரிமாண முறையில் கொடுக்கப்பட்ட இயற்பியல் சமன்பாட்டை சரியா என சோதித்தல்.

$v = u + at$ என்ற இயக்கச் சமன்பாட்டை எடுத்துக் கொள்வோம்.

$$[LT^{-1}] = [LT^{-1}] + [LT^{-2}]\ [T]$$

$$[LT^{-1}] = [LT^{-1}] + [LT^{-1}]$$

(ஒரே மாதிரியான பரிமாணங்கள் பெற்றுள்ள அளவுகளையே கூட்ட முடியும்)

இருபுறமும் உள்ள பரிமாணங்கள் சமம் என்பதை நாம் காண்கிறோம். எனவே இந்த சமன்பாடு பரிமாண முறையில் சரியானது.

## IV. நெடுவினாக்கள்: ═══ 5 மதிப்பெண்கள் ═══

**1. SI அலகு முறையின் ஏழு அடிப்படை அளவுகளையும் அட்டவணைப்படுத்து.**

**விடை.** அறிவியல் அறிஞர்கள் மற்றும் பொறியியல் வல்லுனர்களால் உலகம் முழுவதும் பயன்படுத்தப்பட்ட அலகு முறை மெட்ரிக் முறை (Metric System) என அழைக்கப்பட்டது. 1960 க்கு பிறகு இது பன்னாட்டு அலகு முறை அல்லது SI அலகு முறையாக (System International - French name) அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. உலகளாவிய அறிவியல், தொழில்நுட்பம், தொழில் துறை மற்றும் வணிகப் பயன்பாட்டிற்காக, 1971 இல் நடைபெற்ற எடைகள் மற்றும் அளவீடுகள் பொதுமாநாட்டில் SI அலகு முறையின் நிலையான திட்டக் குறியீடுகள், அலகுகள் மற்றும் சுருக்கக்குறியீடுகள் உருவாக்கப்பட்டு அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

(i) இம்முறையில் ஒரு இயற்பியல் அளவிற்கு ஒரே ஒரு அலகு மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. அதாவது இம்முறை ஓர் பங்கீட்டு, பகுத்தறிவுக்கிசைந்த (rational method) முறையாகும்.

(ii) இம்முறையில் அனைத்து வழி அலகுகளும், அடிப்படை அலகுகளில் இருந்து எளிதாக தருவிக்கப்படுகின்றன. எனவே, இது ஓர் ஓரியல் (coherent) அலகு முறையாகும்.

(iii) இது ஓர் மெட்ரிக் அலகு முறையாதலால் பெருக்கல் மற்றும் துணைப்பெருக்கல் ஆகியன 10 இன் மடங்குகளாக நேரடியாக தரப்படுகின்றன. SI அலகு முறையின் ஏழு அடிப்படை அளவுகளும் அட்டவணையில் தொகுக்கப்பட்டுள்ளன.

அடிப்படை அளவுகளும் அவற்றின் SI அலகுகளும்

| அடிப்படை அளவுகள் | அலகு | குறியீடு |
|---|---|---|
| நீளம் | மீட்டர் | m |
| நிறை | கிலோகிராம் | kg |
| காலம் | வினாடி | s |
| மின்னோட்டம் | ஆம்பியர் | A |
| வெப்பநிலை | கெல்வின் | K |
| பொருளின் அளவு | மோல் | mol |
| ஒளிச்செறிவு | கேண்டிலா | cd |

**2. பிழை பகுப்பாய்வின் கீழ் வரும் பிழைகளின் கணக்கீட்டு முறையுடன் விவரி.**

**விடை.** (i) **தனிப்பிழை (Absolute error)** ஓர் அளவின் உண்மையான மதிப்பிற்கும் அளவிடப்பட்ட மதிப்பிற்கும் இடையே உள்ள வேறுபாடு தனிப்பிழை எனப்படும். $n$ முறை '$a$' சோதனை நிகழ்த்தப்பட்ட '$a$' என்ற ஒரு அளவின் அளவிடப்பட்ட மதிப்புகள் $a_1, a_2, a_3, .....a_n$ எனில் அவற்றின் கூட்டுச் சராசரி மதிப்பே அந்த அளவின் உண்மையான மதிப்பு $(a_m)$ என அழைக்கப்படுகிறது.

$$a_m = \frac{a_1 + a_2 + a_3 + ............. + a_n}{n}$$

அல்லது

$$a_m = \frac{1}{n}\sum_{i=1}^{n} a_i$$

அளவிடப்பட்ட மதிப்புகளின் தனிப்பிழைகள்

$$\Delta a_1 = |a_m - a_1|$$
$$\Delta a_2 = |a_m - a_2|$$
$$........................$$
$$........................$$
$$\Delta a_n = |a_m - a_n|$$

(ii) **சராசரி தனிப்பிழை (Mean Absoulte error)** சராசரி தனிப் பிழை என்பது அனைத்து அளவுகளின் தனிப் பிழைகளின் எண் மதிப்புகளின் கூட்டுச் சராசரி ஆகும்.

$$\Delta a_m = \frac{|\Delta a_1| + |\Delta a_2| + |\Delta a_3| + .......... + |\Delta a_n|}{n}$$

அல்லது $a_m = \frac{1}{n}\sum_{i=1}^{n} |\Delta a_i|$

$a_m$ என்பது உண்மையான மதிப்பு, $\Delta a_m$ என்பது சராசரி தனிப் பிழை எனில், அளவுகளின் எண் மதிப்புகள் $(a_m + \Delta a_m)$ மற்றும் $(a_m - \Delta a_m)$ இடையில் இருக்கும்.

orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com
www.Padasalai.Net www.surabooks.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores



(iii) **ஒப்பீட்டுப்பிழை (Relative error)** சராசரி தனிப்பிழைக்கும், சராசரி மதிப்பிற்கும் (உண்மை மதிப்பிற்கும்) இடையேயான தகவு ஒப்பீட்டுப் பிழை எனப்படும். இது பின்னப் பிழை அல்லது சார்புப் பிழை எனவும் அழைக்கப்படுகிறது.

$$\text{ஒப்பீட்டுப் பிழை} = \frac{\text{சராசரி தனிப்பிழை}}{\text{சராசரி மதிப்பு}} = \frac{\Delta a_m}{a_m}$$

அளவிடப்பட்ட பொருளின் மொத்த பரிமாணத்துடன் ஒப்பிடும்போது தனிப் பிழை எவ்வளவு பெரியது என்பதை விவரிப்பதே ஒப்பீட்டுப் பிழையாகும்.

எடுத்துக்காட்டாக, ஒரு கார் 62 km $h^{-1}$ வேகத்தில் செல்லும்போது, வேகமானி காட்டும் அளவு 60 km $h^{-1}$ இங்கு தனிப்பிழை 62–60 = 2 km $h^{-1}$ ஆகும். ஒப்பீட்டு பிழை = 2/60 =0.033s

(iv) **விழுக்காட்டுப்பிழை (Percentage error)** ஒப்பீட்டுப் பிழையினை விழுக்காட்டில் குறிப்பிட்டால், அது விழுக்காட்டுப் பிழை எனப்படும்.

விழுக்காட்டுப் பிழை சுழிக்கு மிக அருகில் இருந்தால், அந்த அளவீடு உண்மையான அளவிற்கு மிக அருகில் எடுக்கப்பட்ட அளவீடாகும். இது சரியானதும், ஏற்றுக் கொள்ளக்கூடியதும் ஆகும். இப்பிழைகள் துல்லியமற்ற கருவியினால் ஏற்படுகிறதா அல்லது தவறான பரிசோதனை முறைகளால் ஏற்படுகிறதா என்பதைப் புரிந்துகொள்வது அவசியமாகிறது.

**3. முக்கிய எண்ணுருக்களை கணக்கிடுதலில் விதிகளை எடுத்துக்காட்டுடன் அட்டவணைப்படுத்து.**

**விடை. முக்கிய எண்ணுருக்களை கணக்கிடுவதன் விதிகள்**

| வ. எண். | விதிகள் | எடுத்துக்காட்டு |
|---|---|---|
| i) | சுழியற்ற அனைத்து எண்களும் முக்கிய எண்ணுருக்கள் ஆகும். | 1342 ஆனது நான்கு முக்கிய எண்ணுருக்களை கொண்டது. |
| ii) | சுழியற்ற இரு எண்களுக்கு இடைப் பட்ட சுழிகள் முக்கிய எண்ணுருக்கள் ஆகும். | 2008 ஆனது நான்கு முக்கிய எண்ணுருக்களை கொண்டது |
| iii) | சுழியற்ற எண்களுக்கு வலது புறமும் ஆனால் தசம புள்ளிக்கு இடது புறமும் உள்ள சுழிகள் முக்கிய எண்ணுருக்கள் ஆகும் | 30700 ஆனது ஐந்து முக்கிய எண்ணுருக்களை கொண்டது. |
| iv) | a) தசம புள்ளி அற்ற ஒரு எண்ணில் இறுதியாக வரும் சுழிகள் முக்கிய எண்ணுருக்கள் ஆகாது. | அ) 30700 ஆனது மூன்று முக்கிய எண்ணுருக்கள் கொண்டது. |
| | b) அலகுடன் எழுதப்படும் இயற்பியல் அளவீடுகளில் வரும் எல்லா சுழிகளும் முக்கிய எண்ணுருக்களே | ஆ) 30700m ஆனது ஐந்து முக்கிய எண்ணுருக்கள் கொண்டது. |
| v) | ஒன்றை விடக் குறைவான தசம எண்ணில், தசமபுள்ளிக்கு வலது புறமும் ஆனால் முதல் சுழியற்ற எண்ணுக்கு இடதுபுறமும் வரும் சுழிகள் முக்கிய எண்ணுருக்கள் ஆகாது | 0.00345 ஆனது மூன்று முக்கிய எண்ணுருக்களை கொண்டது |
| vi) | தசமபுள்ளிக்கு வலது புறம் உள்ள சுழிகளும் தசம எண்ணில் சுழியற்ற எண்ணின் வலது புறமும் உள்ள சுழிகள் முக்கிய எண்ணுருக்கள் ஆகும். | 40.00 முக்கிய எண்ணுரு நான்கு கொண்டது. 0.030400 முக்கிய எண்ணுரு ஐந்து கொண்டது. |
| vii) | முக்கிய எண்ணுருக்கள் அலகிடும் முறையை பொருத்தது அல்ல. | 1.53 cm, 0.0153 m, 0.0000153 km ஆகியவை மூன்று முக்கிய எண்ணுரு கொண்டது. |

**4. முழுமைப்படுத்தலின் விதிகளை எடுத்துக்காட்டுடன் அட்டவணைப்படுத்து.**

**விடை. முழுமைப்படுத்தலின் விதிகள்**

| வ. எண். | விதிகள் | எடுத்துக்காட்டு |
|---|---|---|
| i) | முக்கிய எண்ணுரு அல்லாத ஓர் இலக்கம் ஐந்துக்கு குறைவு எனில் நீக்கப்படுகிறது. எனவே அதற்கு முன்பு உள்ள இலக்கம் மாறாது | i) 7.32 ஆனது 7.3 ஆக முழுமைப்படுத்தப் படுகிறது. ii) 8.94 ஆனது 8.9 ஆக முழுமைப் படுத்தப்படுகிறது. |
| ii) | முக்கிய எண்ணுரு அல்லாத ஓர் இலக்கம் ஐந்தை விட அதிகம் எனில் அது நீக்கப்பட்டு அதற்கு முன்பு உள்ள இலக்கத்துடன் 1 ஐ அதிகரிக்க வேண்டும். | i) 17.26 ஆனது 17.3 ஆக முழுமையாக்கப் படுகிறது. ii) 11.89 ஆனது 11.9 ஆக முழுமையாக்கப் படுகிறது |

www.Padasalai.Net
www.surabooks.com
orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores



| | | |
|---|---|---|
| iii) | முக்கிய எண்ணுரு அல்லாத ஒரு இலக்கத்தில் ஐந்துக்கு பிறகு வரும் இலக்கம் சுழி அல்லாத எண் எனில், முன்பு உள்ள இலக்கத்துடன் 1 ஐ அதிகரிக்க வேண்டும். | i) 7,352 ஆனது 7.4 ஆக முழுமைப்படுத்தப் படுகிறது, ii) 18,159 ஆனது 18.2 ஆக முழுமைப்படுத்த படுகிறது |
| iv) | முக்கிய எண்ணுரு அல்லாத ஓர் இலக்கத்தில் ஐந்து அல்லது ஐந்துக்கு பிறகு சுழி வரும் எனில் அது நீக்கப்பட்டு அதற்கு அதன் முன்பு உள்ள இலக்கம் இரட்டைப் படை எண் எனில் மாறாது. | i) 3.45 ஆனது 34 முழுமைப்படுத்தப் படுகிறது. ii) 8.250 ஆனது 8.2 ஆக முழுமைப்படுத்தப் படுகிறது. |
| v) | முக்கிய எண்ணுரு அல்லாத ஒரு இலக்கத்தில் ஐந்து அல்லது ஐந்துக்கு பிறகு சுழி வரும் எனில் அது நீக்கப்பட்டு அதற்கு முன்பு உள்ள இலக்கம் ஒற்றைப்படை எனில் 1ஐ அதிகரிக்க வேண்டும். | i) 3.35 ஆனது 3.4 ஆக முழுமைப்படுத்தப் படுகிறது. ii) 8.350 ஆனது 8.4 ஆக முழுமைப்படுத்தப் படுகிறது. |

**5. இரு அளவுகளைப் பெருக்குவதால், வகுப்பதால் ஏற்படும் பிழைகளை விவரி.**

**விடை. இரு அளவுகளைப் பெருக்குவதால் ஏற்படும் பிழைகள் :**

(i) $\Delta A$ மற்றும் $\Delta B$ என்பன முறையே A, B என்ற அளவுகளின் தனிப் பிழைகள் என்க

அவற்றின் பெருக்கல்பலன் $Z = AB$

Z இன் பிழை $\Delta Z$ ஆகும்.

$Z \pm \Delta Z = (A \pm \Delta A)(B \pm \Delta B)$

$= (AB) \pm (A \Delta B) \pm (B \Delta A) \pm (\Delta A \cdot \Delta B)$

இடது புறத்தை Z ஆலும் வலது புறத்தை AB யிலும் வகுக்க நாம் பெறுவது.

$$1 \pm \frac{\Delta Z}{Z} = 1 \pm \frac{\Delta B}{B} \pm \frac{\Delta A}{A} \pm \frac{\Delta A}{A} \cdot \frac{\Delta B}{B}$$

$\frac{\Delta A}{A}, \frac{\Delta B}{B}$ ஆகியவை மிகக் குறைந்த அளவு. எனவே அவற்றின் பெருக்கல் $\frac{\Delta A}{A} \cdot \frac{\Delta B}{B}$ புறக்கணிக்கப்படுகிறது.

இன் பெரும பின்னப் பிழை

$$\frac{\Delta Z}{Z} = \pm\left(\frac{\Delta A}{A} + \frac{\Delta B}{B}\right)$$

இரு அளவுகளைப் பெருக்குவதால் ஏற்படும் பெருமப் பின்னப் பிழையானது தனித்தனி அளவுகளின் பின்னப் பிழைகளின் கூடுதலுக்குச் சமம்.

(ii) **இரு அளவுகளை வகுப்பதால் ஏற்படும் பிழைகள்**

$\Delta A$ மற்றும் $\Delta B$ என்பன முறையே A, B என்ற அளவுகளின் தனிப் பிழைகள் என்க

அவற்றின் பின்னம் $Z = \frac{A}{B}$

Z ன் $\Delta Z$ பிழை ஆகும்.

$$Z \pm \Delta Z = \frac{A \pm \Delta A}{B \pm \Delta B} = \frac{A\left(1 \pm \frac{\Delta A}{A}\right)}{B\left(1 \pm \frac{\Delta B}{B}\right)}$$

$$= \frac{A}{B}\left(1 \pm \frac{\Delta A}{A}\right)\left(1 \pm \frac{\Delta B}{B}\right)^{-1}$$

அல்லது

$$= Z \pm \Delta Z = Z\left(1 \pm \frac{\Delta A}{A}\right)\left(1 \mp \frac{\Delta B}{B}\right)$$

$[x<<1]$ ஆக இருக்கும்போது $(1+x)^n \approx 1 + nx]$

இருபுறமும் Z ஆல் வகுக்க,

$$1 \pm \frac{\Delta Z}{Z} = \left(1 \pm \frac{\Delta A}{A}\right)\left(1 \mp \frac{\Delta B}{B}\right)$$

$$= 1 \pm \frac{\Delta A}{A} \mp \frac{\Delta B}{B} \mp \frac{\Delta A}{A} \cdot \frac{\Delta B}{B}$$

$\Delta A/A$, $\Delta B/B$ மிகக் குறைவு, எனவே அவற்றின் பெருக்கல்பலன் புறக்கணிக்க தக்கது. Z இன் பெரும பின்னப்பிழை, $\frac{\Delta Z}{Z} = \left(\frac{\Delta A}{A} + \frac{\Delta B}{B}\right)$

இரு அளவுகளை வகுப்பதால் பெறப்படும் பெருமபின்னப் பிழையானது தனித்தனி அளவுகளின் பின்னப்பிழைகளின் கூடுதலுக்குச் சமம்.

## கூடுதல் கணக்குகள்: 1 மதிப்பெண்

**1. 1 AU ன் மதிப்பு 1000 *km* ல்**

(a) $1.5 \times 10^5$ m (b) $2.5 \times 10^6$ m

(c) $1.5 \times 10^{11}$ m (d) $2.5 \times 10^{10}$ m

**குறிப்பு :** **[விடை. (a)]**

1 AU = $1.5 \times 10^{11}$ m ; 1 AU வானது 1000 km ல்

$$= \frac{1.5 \times 10^{11} m}{10^6 m} = 1.5 \times 10^5 \text{ m} \quad [\because 1000 \text{ km} = 10^6 \text{m}]$$

**2. அழுத்தத்தின் வழி நிலை அலகினைக் குறிப்பிடு:**

விடை. அழுத்தம் $= \frac{\text{விசை}}{\text{பரப்பு}} = \frac{\text{ஓரலகு விசை}}{\text{ஓரலகு பரப்பு}} = \frac{N}{m^2} = Nm^{-2}$

orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores



**3. ஒரு ஆண்டில் எத்தனை அணு அலகு உள்ளது?**

(a) $6.30 \times 10^4\ m$ (b) $9.46 \times 10^{15}$ m
(c) $6.2 \times 10^2$ m (d) $9.4 \times 10^{16}$ m

**[விடை. (a)]**

**குறிப்பு :** 1 ஒளி ஆண்டு = $9.45 \times 10^{15}$ m

∴ 1 ஒளி ஆண்டில் அணு அலகின் எண்ணிக்கை

$$= \frac{9.45 \times 10^{15}\,\text{m}}{1.5 \times 10^{11}\,\text{m}} = 6.30 \times 10^4\text{m}$$

**4. ஒரு மீட்டரில் எத்தனை μm உள்ளன?**

(a) $10^{-6}$ μm (b) $10^6$ μm
(c) $10^{-3}$ μm (d) $10^{-2}$ μm **[விடை. (b)]**

**குறிப்பு :** 1 மைக்ரான் = 1 μm = $10^{-6}$ m

1 மீட்டரில் μm ன் எண்ணிக்கை $= \frac{1}{10^{-6}} = 10^6 \mu m$

**5. ஒரு பொருளின் வேகம் V = 40 ms$^{-1}$ இதனை kmh$^{-1}$N குறிப்பிட**

(a) 60 (b) 160 (c) 40 (d) 144

**குறிப்பு:** வேகத்தின் அளவு $\frac{m}{s} = 40$ **[விடை. (d)]**

km/h ல் $= 40 \times \frac{18}{5} = 144$ kmh$^{-1}$.

**6. ஒரு பொருளின் வேகம் V = 90 km/h m/s ல் குறிப்பிட**

(a) 90 (b) 25
(c) 45 (d) 180

**குறிப்பு:** வேகம் $km/h$ ல் = 90 **[விடை. (b)]**

$m/s$ ல் $= 90 \times \frac{5}{18} = 25$ m/s.

**7. ஒரு உலோகத் தகட்டின் நிறை 3.5 *kg*. அதன் பருமன் 1.5 $m^3$. உலோகத்தகடின் அடர்த்தி கண்டுபிடி.**

(a) 1.5 kg/m$^3$ (b) 2.3 kg/m$^3$
(c) 3.4 kg/m$^3$ (d) 4.8 kg/m$^3$

**[விடை. (b)]**

**குறிப்பு:** அடர்த்தி $= \frac{\text{நிறை}}{\text{பருமன்}} = \frac{3.5\text{kg}}{1.5\text{m}^3} = 2.3$ kg/m$^3$

**8. 1° ன் மதிப்பு**

(a) $1.745 \times 10^{-2}$ ரேடியன்
(b) $1.946 \times 10^{-11}$ ரேடியன்
(c) 3.6 ரேடியன்
(d) 3600 ரேடியன் **[விடை. (a)]**

**குறிப்பு:** $1° = \frac{2\pi}{360} = \frac{\pi}{180} = \frac{22}{7 \times 180} = 1.745 \times 10^{-2}$ ரேடியன்

**9. mN, Nm மற்றும் *nm* இவை அனைத்தும் ஒரே வகையான குறியீடுகளா?**

**விடை.** இல்லை.

mN – மில்லிநியூட்டன் 1 mN = $10^{-3}$ N
Nm – நியூட்டன் மீட்டர்; nm – நேனோமீட்டர்.

**10. ஒரு கிலோமீட்டரில் எத்தனை பர்செக் உள்ளன?**

(a) $3.084 \times 10^{-16}$ (b) $3.08 \times 10^8$
(c) $3.24 \times 10^{-14}$ (d) ஏதுமில்லை

**குறிப்பு :** **[விடை. (c)]**

1 பர்செக் = $3.08 \times 10^{16}$m; $3.08 \times 10^{16}$m = 1 பர்செக்.

$$1\text{ km} = \frac{1 \times 10^3}{3.08 \times 10^{16}} \text{ பர்செக்} = 3.24 \times 10^{-14} \text{ பர்செக்.}$$

**11. ஒரு பொருளின் கோணம்: 18.2°. அதன் கோண விட்டத்தை ரேடியனில் கூறு:**

(a) 36.4 ரேடியன்
(b) $3.64 \times 10^{-2}$ ரேடியன்
(c) $31.74 \times 10^{-2}$ ரேடியன்
(d) 3.17 ரேடியன் **[விடை. (c)]**

**குறிப்பு :** $\theta = 18.2° = \frac{18.2}{60 \times 60} \times \frac{\pi}{180} = \frac{18.2}{3600} \times \frac{3.14}{180}$

$= 31.74 \times 10^{-2}$ ரேடியன்

**12. ஒரு வட்டமானது 10m ஆரத்துடன் மையத்துடன் உண்டாக்கும் கோணம் 60°. எனில் வில்லின் நீளம் என்ன?**

(a) 5.24 m (b) 6.21 m (c) 7.1 mm (d) 10 mm

**[விடை. (a)]**

**குறிப்பு :**

ஆரம் $r = 10\ m$ கோணம் $\theta = \frac{\pi}{6} = (60^\circ)$

வில்லின் நீளம் $(l) = r\,\theta$

$$= 10 \times \frac{\pi}{6} = 5.24 \text{ m}$$

**13. இரும்புத் தகட்டின் நிறை 0.250 *kg*. பருமன் 1.5 $m^3$ இரும்புத் தகட்டின் அடர்த்தியை SI அலகுமுறையில் கூறு.**

(a) 0.267 kg m$^{-3}$ (b) 0.167 kg m$^{-3}$
(c) 0.255 kg m$^{-3}$ (d) 0.285 kg m$^{-3}$

**குறிப்பு :** **[விடை. (b)]**

இரும்புத் தகட்டின் நிறை = 0.250 kg

பருமன் = 1.5 m$^3$

அடர்த்தி $= \frac{\text{நிறை}}{\text{பருமன்}} = \frac{0.250}{1.5} = 0.167$ kgm$^{-3}$

www.Padasalai.Net
www.surabooks.com
orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores



**14. உந்தத்தின் S.I அலகு**

(a) $ms^{-1}$ (b) $ms^{-2}$ (c) $kg\ ms^{-1}$ (d) $kg\ m^2\ s^{-1}$

**[விடை. (c)]**

**குறிப்பு :**

நேர்க்கோட்டு உந்தம் = நிறை × திசைவேகம்

நிறையின் SI அலகு = kg

திசைவேகத்தின் SI அலகு $= \frac{\text{தொலைவு}}{\text{காலம்}} = \frac{m}{s} = ms^{-1}$

∴ நேர்க்கோட்டு உந்தத்தின் அலகு = $kg\ ms^{-1}$

**15. பரப்பிற்கான SI அலகு**

(a) m (b) $m^2$ (c) $Nm^{-1}$ (d) $cm^{-1}$

**[விடை. (b)]**

**16. புவிஈர்ப்பு மாறிலி (G) ன் SI அலகு**

(a) $kg^{-2}m^{-2}$ (b) $kg\ ms^{-1}$ (c) $Nm^2kg^{-2}$ (d) $Nm^{-1}$

**[விடை. (c)]**

**குறிப்பு :** $G = \frac{Fr^2}{m_1m_2}$ $\left(\because F = G.\frac{m_1m_2}{r^2}\right)$

விசை F க்கான SI அலகு = N

தொலைவு ($r$) க்கான SI அலகு = $m = r^2 = m^2$

நிறைகள் $m_1, m_2$ க்கான SI அலகு = $(kg)^2$

$$\frac{Fr^2}{m_1m_2} = \frac{Nm^2}{kg^2} = Nm^2\ kg^{-2}$$

## 2 மதிப்பெண்கள்

**1. ஒரு வட்டத்தின் ஆரம் 3.12 மீ எனில் அதன் பரப்பை முக்கிய எண்ணுருக்களில் கணக்கிடுக.**

**தீர்வு.** ஒரு வட்டத்தின் ஆரம் $r = 3.12$ m

வட்டத்தின் பரப்பு A = ?

$A = \pi r^2 = 3.14 \times 3.12 \times 3.12\ m^2 = 30.566016$

முக்கிய எண்ணுரு விதிப்படி $A = 30.6\ m^2$

(கொடுக்கப் பட்ட தரவின்படி முக்கிய எண்ணுரு 3).

**2. ஒரு ஒளி ஆண்டினை அணு அலகில் குறிப்பிடு கொடுக்கப்பட்டுள்ள தரவுகள்:**

$1\ AU = 1.496 \times 10^{11}$m

ஒளி ஆண்டு $= 9.46 \times 10^{15}$m

**தீர்வு.** $$\frac{1ly}{1AU} = \frac{9.46\times10^{15}}{1.496\times10^{11}} = \frac{9.46\times10^{15}\times10^{-11}}{1.496} = 6.32 \times 10^4\ AU$$

∴ ஒரு ஒளி ஆண்டில் $6.32 \times 10^4$ AU உள்ளது.

**3. ஒரு திருகு அளவியைப் பயன்படுத்தி ஒரு கம்பியின் தடிமன் 5 mm என அளக்கப்படுகிறது.**

(i) விகிதப்பிழை (ii) விழுக்காடுபிழை கணக்கிடு.

கொடுக்கப்பட்டுள்ளவை:

கம்பியின் தடிமன் ($t$) = 5 mm

துல்லியம் $\Delta t = 0.01$ mm

**தீர்வு.** (i) விகிதப்பிழை $= \delta_t = \frac{\Delta t}{t} = \frac{0.01}{5} = 0.002$

(ii) விழுக்காடு பிழை $\delta_t = \frac{\Delta t}{t} \times 100\%$

$= 0.002 \times 100\% = 0.02\%$

**4. ஒரு புரோட்டானின் நிறை $1.67 \times 10^{-27}$ kg. 1 kg ல் அடங்கியுள்ள புரோட்டான்கள் எத்தனை?**

கொடுக்கப்பட்டவை:

ஒரு புரோட்டானின் நிறை $= 1.67 \times 10^{-27}$ kg

**தீர்வு.** 1 kg என்பது $\frac{1}{1.67\times10^{-27}}$ புரோட்டான்களின் நிறை

$= 0.5988 \times 10^{27}$ புரோட்டான்கள்

$= 5.988 \times 10^{26}$ புரோட்டான்கள்

∴ $5.988 \times 10^{26}$ புரோட்டான்கள் 1 kg ல் உள்ளன.

**5. வில்லின் 1 செகண்டுக்கான கோணத்தைக் கணக்கிடு.**

**தீர்வு.** வில்லின் 1 செகண்டு $= 1'' = \frac{1}{60\times60}$

$= \frac{1}{60\times60} \times \frac{\pi}{180}$ $\left[\because 1^\circ = \frac{\pi}{180}\right]$

$= \left[\frac{1}{3600} \times \frac{3.14}{180}\right]$

∴ வில்லின் 1 செகண்டு $= 4.85 \times 10^{-6}$ ரேடியன்.

**6. நியூக்ளியஸின் ஆரம் $1.5 \times 10^{-15}$ m என்பது பெர்மி வரிசையில் உள்ளது. அதன் பருமனைக் கண்டுபிடி.**

**தீர்வு.** நியூக்ளியஸின் ஆரம் ($r$) $= 1.5 \times 10^{-15}$m

நியூக்ளியஸின் பருமன் $v = \frac{4}{3}\pi r^3$

$= \frac{4}{3} \times 3.14 \times (1.5 \times 10^{-15})^3$

$= \frac{4}{3} \times 3.14 \times (4.5 \times 10^{-45}) = 18.84 \times 10^{-45}\ m^3$

∴ நியூக்ளியஸின் பருமன் $= 18.84 \times 10^{-45}\ m^3$.

www.Padasalai.Net www.surabooks.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores

அலகு

# 05 துகள்களாலான அமைப்பு மற்றும் திண்மப் பொருட்களின் இயக்கம்




www.Padasalai.Net
www.surabooks.com



orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or
Available at All Leading Bookstores



## நினைவில் கொள்ள வேண்டிய சூத்திரங்கள்

**I.** (1) இரு துகள் அமைப்பின் நிறை மையம் ஆய அச்சைப் பொருத்து $(x_1, y_1)$ & $(x_2, y_2)$

$$x_{cm} = \frac{m_1x_1 + m_2x_2}{m_1 + m_2}$$

$$y_{cm} = \frac{m_1y_1 + m_2y_2}{m_1 + m_2}$$

(2) நியூட்டனின் இரண்டாம் இயக்க விதிப்படி இரு துகளின் அமைப்பின் நிறைமையம் $\vec{R}_{cm} = \frac{m_1\vec{r}_1 + m_2\vec{r}_2}{m_1 + m_2}$

(3) $n$ - துகள் கொண்ட அமைப்பின் நிறை மையம் $\vec{R}_{cm} = \sum_{i=1}^{n} \frac{m_i\vec{r}_i}{M}$

(4) தொடர்ச்சியான நிறை பரவலில் நிறையை ஆதி ஆச்சாக கொண்டால் $\int \vec{r}\,dm = 0$ $\int x\,dm = \int y\,dm = \int 2dm = 0$

(5) கோண உந்தத்திற்கும் நிறை மையத்திற்குமான தொடர்பு $\vec{V}_{cm} = \frac{1}{M}\vec{P}$ (or) $\vec{P} = M\vec{V}_{cm}$

(6) இரு துகள் அமைப்பில் நிறை மையத்தின் திசை வேகம் $\vec{V}_{cm} = \frac{m_1\vec{v}_1 + m_2\vec{v}_2}{m_1 + m_2}$

(7) வெவ்வேறு துகள்கள் கொண்ட ஒரு அமைப்பில் நிறை உந்தங்களின் அல்ஜிப்ரிக் கூட்டுத் தொகை, நிறை மையத்தைப் பற்றி சுழியாகும்.

**II. திருப்புவிசை அதன் ஆற்றல் மற்றும் இதனால் செய்யப்படும் வேலை மற்றும் கோண உந்தம்**

(8) திருப்பு விசை = விசை × சுழற்சி அச்சிலிருந்து அதன் செங்குத்துத் தொலைவு $\tau = Fd$ Nm

(9) வெக்டர் வடிவில் $\tau = rF\sin\theta$ (அ) $\vec{\tau} = \vec{r} \times \vec{F}$

(10) திருப்பு விசையின் ஆற்றல் = திருப்புவிசை × கோணத்திசைவேகம் (அ) $P = \tau\,\omega$

(11) ஒரு திருப்பு விசையால் செய்யப்படும் வேலை $W = \tau\theta$ [திருப்பு விசை × கோண இடப்பெயர்ச்சி]

(12) கோண உந்தம் = நேர்க்கோட்டு உந்தம் × சுழற்சி அச்சிலிருந்து செங்குத்து தொலைவு (J) $L = Pd$

(13) வெக்டர் வடிவில் கோண உந்தம் $L = rp\sin\theta$ (அ) $\vec{L} = \vec{r} \times \vec{p}$

(14) ஒரு துகளின் நிறை $m$ சீரான வேகத்துடன் $(vmr)$ வட்டத்தின் ஆரம் வழியே இயங்கினால் அதன் கோண உந்தம் $L = mvr$

(15) திருப்புவிசை = கோண உந்தத்தின் மாறுபாடு வீதம் (அ) $\tau = \frac{dL}{dt}$

**அலகுகள் :** $\tau = Nm$, $W = J$

$P$ = வாட், கோணத்திசைவேகம் $W = \text{rad s}^{-1}$

$L = \text{Kgm}^2\text{s}^{-1}$

**III. நிலைமத்திருப்புத்திறன், சுழற்சி ஆரம்**

(16) கொடுக்கப்பட்ட அச்சைப் பற்றி சுழலும் ஒரு பொருளின் நிலைமத் திருப்புத் திறன் $I = \sum_{i=1}^{n} m_i . r_i^2$

(17) சுழற்சி ஆரம் K. $I = MK^2$ (அ) $K = \sqrt{\frac{I}{M}}$

அனைத்துத் துகள்களுக்கு ஒத்த நிறையெனில் $K = \frac{\sqrt{r_1^2 + r_2^2 + \dots + r_n^2}}{n}$

அலகு $k = m$

**IV. திருப்புவிசை, கோண உந்தம் மற்றும் நிலைமத் திருப்புத்திறன்**

(1) திருப்புவிசை $\tau$ = M.I × கோண முடுக்கம் (அ) $\tau = I\alpha$

(2) கோண உந்தம் = M.I × கோணத்திசை வேகம் $L = I\omega$

(3) ஒரு சாய் தளத்தின் மீது = $L = I\omega$

orders@surabooks.com Ph:8124201000/8124301000
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is Only for Sample, Full Book Order Online or Available at All Leading Bookstores



## VI. நிலைமத் திரும்புத்திறன் (வெவ்வேறு திண்ம உருவங்களில்)

(1) இணையச்சுத் தேற்றம் $I_z = I_x + I_y$

(2) செங்குத்து அச்சுத்தேற்றம் $I = I_{cm} + Md^2$

(3) ஒரு வட்ட வடிவ வளையத்தின் அதன் அச்சைப்பற்றி மையத்தின் வழியாகவும் தளத்திற்கு செங்குத்தானதுமான நிலைம திருப்புத்திறன் $I = MR^2$

(4) ஒரு மெல்லிய வளையத்தின் விட்டத்தைப் பற்றிய நிலைமத்திருப்புத் திறன் $I = \frac{1}{2}MR^2$

(5) ஒரு மெல்லிய வளையத்தின் ஏதோ ஒரு தொடுகோடு பற்றிய அதன் தளத்தில் நிலைமத்திருப்புதிறன் $I = \frac{3}{2}MR^2$

(6) ஒரு வட்டத் தட்டின் அச்சைப்பற்றி மையத்தின் வழியே செல்லும், அதன் செங்குத்தான தளத்தில் நிலைமத் திருப்புத்திறன் $I = \frac{1}{2}MR^2$

(7) ஒரு வட்டத் தட்டின் விட்டத்தைப் பற்றிய நிலைமத் திருப்புத் திறன் $I = \frac{1}{4}MR^2$

(8) ஒரு வட்டத் தட்டின் தொடு கோடு பற்றிய அதன் தளத்தில் நிலைமத் திருப்புத்திறன் $I = \frac{5}{4}MR^2$

(9) ஒரு மெல்லிய தண்டின் மையப்புள்ளி வழியே செல்லும் அச்சைப்பற்றிய, தண்டிற்குக் குத்தான நிலைமத் திருப்புத்திறன் $I = \frac{1}{12}ML^2$

(10) ஒரு மெல்லிய தண்டின் அச்சைப்பற்றி முனை ஒரு வழியாகச் செல்லும் தண்டிற்கு குத்தான நிலைத் திருப்புத்திறன் $I = \frac{1}{3}ML^2$

(11) ஒரு செவ்வகத்தளத்தின் பக்கங்கள் $l$ மற்றும் $b$ மையத்தின் வழியே செல்லும் அச்சிற்கும், தளத்திற்கு செங்குத்தானது நிலைமத் திருப்புத்திறன் $I = M\left(\frac{l^2+b^2}{12}\right)$

(12) ஒரு வட்ட வடிவ திட உருளையின் உருவத்தின் சரிபாதியாக அச்சைப் பற்றிய நிலைமத்திறன் $I = \frac{1}{2}MR^2$

(13) ஒரு உள்ளீடற்ற வட்ட வடிவ திண்ம உருளையின் அச்சைப்பற்றிய நிலைமத் திருப்புத்திறன் $I = MR^2$

(14) ஒரு திண்ம கோளத்தின் அதன் மையத்தின் வழியாகச் செல்லும் அச்சின் நிலைமத் திருப்புத்திறன் $I = \frac{2}{5}MR^2$

(15) ஒரு திண்ம கோளத்தின் தொடுகோடைப் பற்றிய நிலைமத்திருப்புத்திறன் $I = \frac{7}{5}MR^2$

(16) ஒரு உள்ளீடற்ற உருளையின் மையத்தின் வழியே செல்லும் ஒரு அச்சைப்பற்றிய நிலைமத் திருப்புத்திறன் $I = \frac{2}{3}MR^2$

(17) ஒரு உள்ளீடற்ற கோணத்தின் தொடுகோட்டைப்பற்றிய நிலைமத் திருப்புத்திறன் $I = \frac{5}{3}MR^2$

## மதிப்பீடு

